# "தர்மம் சர,,
## "धर्मं चर,,
அக்டோபர் (15.10.2025) , பிரதி-14 -கும்பகோணம்


>>> அன்னப்ராசனம் >>> ப்ரஹ்மஸ்ரீ குருராம கனபாடிகள் பேசுகிறார்

**अन्नात्पुरुषः । स वा एष पुरुषोऽन्नरसमयः**



வேதங்களிலும் உபநிஷத்துகளிலும் மனித வாழ்க்கையின் மிகவும் முக்கியமான தத்துவமாக கருதப்படும் பலவற்றுள் அடிப்படையானது அன்னம். மேலும் பல மந்திரங்கள் அதன் புகழுக்காக அளிக்கப்படுகிறது.




ஸம்ஸ்கார நியமம்

**செய்ய வேண்டிய காலம்:**

षष्ठे मासेऽन्नप्राशनम् । கிருஹ்ய சூத்திரங்களின்படி, குழந்தை பிறந்த ஆறாவது மாதத்தில் அன்னப்ராசனம் செய்யப்பட வேண்டும்.

षष्ठेऽन्नप्राशनं मासि यद्वेष्टं मङ्गलं कुले

जन्मनोऽपि षष्ठे मासि ब्राह्मणान् भोजयित्वा आशिषो वाचयित्वा

दधिमधुघृतम् ओदनम् इति संसृज्य अवदाय उत्तरैः मन्त्रैः कुमारं प्राशयेत्।

பிறந்த ஆறாவது மாதத்தில் பிராமணர்களுக்கு போஜனம் அளித்து , ஆசி பெற்று , தயிர், தேன், நெய் மற்றும் அன்னம் ஆகியவற்றைக் கலந்து, குழந்தைக்கு அன்னம் கொடுக்கப்பட்டு, பிந்தைய மந்திரங்களால் அன்னம் அளிக்க வேண்டும் என்று ஆபஸ்தம்பக்ருஹ்ய சூத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

**तथाऽन्नं प्राणिनां प्राणा अन्नं चाहुः प्रजापतिम्**

(अन्नम् वा आहरः) அக்னிக்கு வழங்கப்படும் பிரசாதங்களிலிருந்து மீதமுள்ள அன்னம் பின்னர் ஒரு கிண்ணத்தில் எடுத்து, மென்மையாக்கப்பட்டு, பின்னர் அது குழந்தைக்கு 3 முதல் 5 முறை ஊட்டப்படுகிறது. அன்னம் அந்த குழந்தையின் கையின் கட்டைவிரல் அளவு இருக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

இன்னும் அறிவோம்

## ஸ்ரீமதி ஸௌம்யா குருராமன்




तैले लक्ष्मीर्जले गङ्गा सन्ति यांस्सर्वदेवता: ।
अभ्यज्यैव तत: स्नाया दुष्णवारिणि मानव: ॥

ஆச்வயுஜமாதத்தின் க்ருஷ்ண பக்ஷ சதுர்த்தசியில் ஸூர்யோதயகாலத்தில் அப்யங்கஸ்நானம் (எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்நானம்) செய்ய வேண்டும். அன்று எண்ணெயில் லக்ஷ்மியும், ஜலத்தில் கங்கையும், ஸகல தேவர்களும் இருக்கின்றனர்.

ஆகையால் அன்று மனிதன் எண்ணெய்யிட்டுக் கொண்டு சூடான ஜலத்தில் ஸ்நானம் செய்யவேண்டும். துலா (ஐப்பசி) மாஸத்தில் தீபாவளி தினத்தில் காவேரியில் ஸ்நானம் செய்பவரின் புண்யத்திற்குக் கணக்கே இல்லை. அந்த நரகசதுர்தசியில் ஸ்நானம் செய்யும் மனிதர்களைக் கண்டு பாபங்களும் நரகங்களும் பயப்படுகின்றன. இந்த நரகசதுர்தசீ தினத்தில் 66-கோடி தீர்த்தங்களும் காவேரியில் இருக்கின்றன. அன்று அக்காவேரியில் ஸ்நானம் செய்து, காவேரியின் மாஹாத்மியத்தை கேட்பவரின் பாபமெல்லாம் அன்றே நசிக்கின்றது. அன்று, ஒன்று இரண்டு மூன்று நான்கு ப்ராம்மணர்களுக்கு நல்லெண்ணெயைத் தானம் செய்பவர் எண்ணெயின் துளிகளுக்குச் சமமான வருஷங்கள் வரையில் கைலாஸத்தில் ஸுகமாயிருப்பான். தீபாவளி தினத்தில் அப்யங்க ஸ்நானம் செய்து அலங்காரம் செய்துகொண்டு தம்மாலியன்ற பொருள்களைத் தானம் செய்பவர்கள் மோக்ஷமடைகின்றனர். ஸகல பாபங்களையும் போக்கும் இந்தச் சதுர்தசீ 'நரகசதுர்தசி' என்று ப்ரஸித்தமாகும்.இவ்வாறு தீபாவிளியின் சிறப்பானது, பரஹ்மவைவர்த்த புராணத்தில் நிதர்ஷணமாக சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னும் அறிவோம்

---



## “அடிப்படை தர்மங்கள்” காயத்ரீ ஜபவிதி

வித்வான் விரூபாக்ஷ சர்மா

पूर्वां सन्ध्यां जपंस्तिष्ठेत् सावित्रीमार्कदशनात् ।
पश्चिमां तु समासीन: सम्यगार्क्षविभावनादिति ।

காலை ஸந்த்யையில் ஸூர்யோதயம் வரையில் நின்றுகொண்டு காயத்ரியை ஜபித்துக் கொண்டு நிற்க வேண்டும்.
மாலை ஸந்த்யையில் அமர்ந்துகொண்டு காயத்ரியை ஜபித்துக் கொண்டு நன்றாய் நக்ஷத்ரங்கள் தெரியும் வரையில் உட்கார்ந்திருக்க வேண்டும்.



## சந்தேஹ விளக்கம்.


**ஸ்த்ரீகள் பஞ்சாயதன பூஜையை செய்யலாமா?**

**விக்ரஹங்களை மாத்ரம் புருஷன் உத்தரவிட்டால் பூஜிக்கலாம்.**
**பாணம் ஸாளக்ராமங்களை தொடவும் கூடாது.**

---

>>> வேங்கடேஷ்- பூர்வமீமாம்ஸா சிரோமணி

## யோகவாசிஷ்ட கதைகள்



### உத்பத்தி ப்ரகரணத்தில் இடம் பெற்ற ஒரு கதை

அவன் தோன்றியது ஞானாகாசத்தில்.

அக்காரணத்தால்தானோ என்னவோ, அவனுக்கு அந்தக் குக்கிராமத்தில் வாழ்வதில் வருத்தமொன்றும் தெரியவில்லை.

அவன் எப்போதும் நீண்ட, தங்குதடையற்ற மௌனநிலையில் தன் நாட்களைக் கழித்து வந்தான்.அவன் அனைத்து உயிர்களை நோக்கியும் சமபார்வை உடையவனாக இருந்தான்.இவன் இந்தக் குக்கிராமத்தில், மரணமென்பதின்றி தன் பாட்டுக்கு தன் போக்கில் வாழ்ந்து வந்திருந்த வேளையிலே, கால தேவனின் பார்வை இவன் மேல் படலாயிற்று.இவனைக் கண்ட மறு கணமே கால தேவன் மனதில் ஆயிரம் எண்ணங்கள் ஓடலாயின . அவற்றில் சில:
இது என்ன! என்னால் இவனைத் தீண்ட இயலவில்லையே! எத்தனை முயன்றாலும் என்னால் இவன் வரைகளைக் காண இயலாதபடிக்கு இவனது பரிமாணங்கள் விரிந்து கிடக்கின்றனவே! ஒரு பலகாரத்தை விழுங்குகிற மாதிரி இந்த உலகையே விழுங்கி ஏப்பம் விடுகிற எனக்கு இந்த ஆகாசஜன் புதிராக நிற்கிறான்- இவனைக் கட்டுக்குள் கொண்டு வருவது எவ்வண்ணம்!இந்த ஆகாசஜன் கதையை எப்பாடு பட்டேனும் முடித்தே தீருவேன்!" இவ்வண்ணம் தன முயற்சியில் உறுதி பூண்டவனாக மீண்டும் ஆகாசஜனை நோக்கித் தாக்குதல் தொடுக்கலாயினன் கால தேவன்.

தொடரும்

வேதப்பயிர் செய்து”
“வேதவாழ்வினைக்
கடைப்பிடித்தோம் “
“வேதங்கள்
பாடுவாள் காணீர்”

நமது சந்ததியினர்
வேதங்களைக் கற்கும்
வாய்ப்பை
ஏற்படுத்தித்தருவோம்







நவராத்ரியில் துர்காஷ்டமியான 30-9-2025 அன்று நமது கும்பகோணம்
ஶ்ரீ மந்த்ர பீடேஸ்வரி வேத பாடசாலையில் சண்டி ஹோமம்,
நாம் எதிர்பார்த்ததற்கு மேல் அம்பாள் அருளால் யதோக்தமாக நன்கு நடைபெற்றது.
ஆரோக்யம், மன நிம்மதி, உள்பட எல்லா விதமான க்ஷேமங்களும் அனைவருக்கும்
கிடைக்க , மற்றும் லோக க்ஷேமார்த்தமாகவும் ஹோம சமயத்தில் அம்பாளிடம்
விசேஷமாக பிரார்த்தனை செய்யப்பட்டது.









தீபாவளி புண்யதினத்தில், எல்லோருக்கும் வேதோக்த ஆசீர்வாதங்கள்
அருளப்பெற ப்ரார்த்தனை செய்கிறோம்.